www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

# மாதிரித்தேர்வு – 1

**12 ஆம் வகுப்பு -தமிழ் – விடைக்குறிப்பு** **மதிப்பெண்கள் :90**

## பகுதி - 1 *14 X 1= 14*

1.இ) தொல்காப்பியம் 2.ஆ) உயர்திணை, அஃறிணை 3.இ) மழைத்துளிகள்
4.இ) நிறுத்தற்குறிகளை உரிய இடங்களில் இட்டு எழுதுதல் 5.ஈ)தந்தைவழிச் சமூக முறை
6. ஆ) சிந்தாமணி 7. இ) காட்சி 8. ஈ) கூற்று சரி, காரணம் சரி 9.இ) தண்டியலங்காரம் 10.அ)
3, 1, 4, 2 11. அ) வரப்போவதை முன்னரே அறிந்து காத்துக்கொள்பவர் 12.இ) வளர்ந்த 13.
ஆ) நல்லியக்கோடனும், குமணனும் 14. அ) குறியீடு

## பகுதி – 2 பிரிவு -1

**எவையேனும் 3 மட்டும்** *3 X 2 =6*

15. செந்நிறத்து வானம் போல் சிவந்த கைகள் உடைய உழைக்கும் தொழிலாளர்களின் திரண்ட தோள் மீது வீற்றிருக்கும் வியர்வை முத்துக்களைப் பாட தமிழின் துணை வேண்டும் என்கிறார் சிற்பி.
16. நகரத்தில் உள்ள மாசுகள் பெய்கின்ற மழையினால் அகற்றப்பட்டன. மழைக் காலமாக இருந்தாலும், திடீரென வெளிப்பட்ட சூரிய வெளிச்சத்தால் நகரமானது புதுப் பொலிவு பெறுகிறது. இதனையே கவிஞர் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது என்று கூறுகிறார்.
17. கலிவிழா – திருமயிலையில் கொண்டாடும் எழுச்சிமிக்க விழா
ஒலிவிழா – கபாலீச்சர இறைவனுக்குப் பூசையிடும் பங்குனி உத்திர ஆரவார விழா.
18. நகை, அழுகை, இளிவரல், மருட்கை , அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை.

## பிரிவு -2

**எவையேனும் 2 மட்டும்** *2 X 2 = 4*

19. தாய்வழி முறையில் குடும்பத்தின் சொத்தும், வளங்களும் பெண்களுக்கே போய்ச் சேர்ந்தன. தாய்வழிக் குடும்பங்களில் பெண்களே குலத் தொடர்ச்சிக்கு உரியவர்களாக இருந்தனர்.
20. **தமிழில் :** நிகண்டு, நன்னூல், காரிகை, தண்டியலங்காரம், நீதிநூல்கள்.
**கணிதத்தில் :** கீழ்வாயிலக்கம், மேல்வாயிலக்கம், குழிமாற்று முதலிய பலவகை வாய்பாடுகள்.'தலைகீழ்ப்பாடம்' என்ற முறையும் உண்டு.ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் போன்ற அகராதி வடிவில் அமைந்த நூல்கள் நினைவாற்றலை வளர்க்க உதவின.
21. அழகுக் கலைகள் பற்றி தமிழில் வெளிவந்த முழுமையான நூல்.தமிழரது கலைத்திறனை எடுத்தோதுவதாக அமையும் நூல்.தமிழக அரசின் முதற்பரிசைப் பெற்ற நூல். இதன் ஆசிரியர் மயிலை சீனி. வேங்கடசாமி.

## பிரிவு – 3

**எவையேனும் ஏழனுக்கு மட்டும்** *7 X 2 = 14*

22. உழவர், தான் விளைவித்த காய்கறிகளை நல்ல விலைக்கு விற்க விழைந்தார்.
23.குமரனை வீட்டில் பார்த்தேன்.
மாறனை, பேச்சுத்திறனால் யார் வெல்ல முடியும்?
24. ஐப்பசி அடைமழையில் ஊருணி நிறைந்தது.
25.பல கை சேர்ந்தால் ஓசை உண்டாகும்
பலகையின் மீது புத்தகத்தை வை.
கோவிலில் இன்று சிறப்பு வழிபாடு நடைபெறுகிறது
கோ தனது வில்லால் யானையை வீழ்த்தினான்.
26. இரவு சித்தப்பாவைக் காவலுக்குப் போகச்சொல்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

27.ஆட்டுப்பட்டியைச் சுற்றிலும் எலிகள் பொந்துகள் அமைத்திருந்தன.

28. வெண்பாவானது வெண்டளையினால் அமைய வேண்டும் என்பது விதி ஆகும். வெண்பாவிற்குரிய தளை வெண்டளை ஆகும். இந்த வெண்டளை, இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

29.ஏழையென – ஏழை + என – இ,ஈ, ஐ வழி யவ்வும்

ஏழை + ய் + என

ஏழை + (ய் + எ )ன - உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பே - ஏழையென

உரனுடை – உரன் + உடை – உடல்மேல் உயிர் வந்தொன்றுவது இயல்பே – உரனுடை

30. Animation – அசைவூட்டம் , Sound effect – ஒலி விளைவு

**பகுதி -3 பிரிவு - 1**

**எவையேனும் 2 மட்டும்** *2 X 4 = 8*

31. **இடம் :** காவியதர்சம் என்ற வடமொழி இலக்கண நூலினைத் தழுவி தமிழில் தண்டி என்பவரால் எழுதப்பட்ட தண்டியலங்காரம் என்ற இலக்கண நூலில் ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும் என்ற வரிகள் இடம் பெற்று உள்ளன.

**பொருள்:** ஒலிக்கும் அலைகளை உடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில் இருள் நீங்கும்.இந்த பாடல் வரிகள் ஆனது தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையே உள்ள ஒற்றுமையினை கூறுகிறது.

**விளக்கம்:** சூரியன் தன் கதிர்களால் ஒலிக்கும் அலைகளை உடைய கடலால் சூழப்பட்ட உலகத்தில் பரவி காணப்படுகின்ற புற இருளினைப் போக்கும் தன்மையினை உடையதாக உள்ளது.அது போலவே தமிழ் மொழியும் மக்களின் அக இருளைப் போக்கி, அறியாமையினை அகற்றும் சிறப்பு உடையதாக உள்ளது.

32. சடாயுவை தன் தந்தைக்கு நிகராக எண்ணிய இராமன், மகன் என்ற முறையில் இறுதிச் சடங்குகளைச் செய்தான்.அகில், சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்தான்.தருப்பைப் புற்களை அடுக்கினான்.நன்னீர் கொண்டு வந்தான்.தன் பெரிய கரங்களால் சடாயுவின் உடலைத் தூக்கிக் கொண்டு வந்து இறுதிச் சடங்குக்கு உரிய மேடையில் வைத்து இறுதிச் சடங்கினைச் செய்தான்.இதுவே சடாயுவைத் தந்தையாக ஏற்று, இராமன் ஆற்றிய கடமை ஆகும்.

33. ஒரு நெறிப்பட்ட மனத்துடன் உன்னுடைய மலரினைப் போன்ற திருவடிகளை நினைக்கின்ற உத்தமருடைய உறவு வேண்டும்.உள்ளத்தில் ஒன்றை வைத்துப் புறத்தில் ஒன்றைப் பேசும் வஞ்சகருடைய உறவு என்னைப் பற்றாது காக்க வேண்டும் என கந்தவேளிடம் இராமலிங்க அடிகள் அவர்கள் வேண்டிக் கேட்கிறார்.

34. அதிசய மலர் பூத்த செடியானது, ஆள் இல்லாத நேரத்தில் உலவித் திரிந்த யானைகள், வெளியிட்ட எச்சத்தில் இருந்து முளைத்திருக்கலாம்.யாரோ ஒருவருடைய சப்பாத்துக் கட்டையின் (காலணி) பின்புறமோ ஒட்டி வந்த விதை, உயிர் பெற்றுச் செடியாக முளைத்து இருக்கலாம் எனத் தமிழ்நதி கூறுகிறார்.

**பிரிவு – 2**

**எவையேனும் 2 மட்டும்** *2 X 4 = 8*

35. வெள்ள நீர் நிரம்ப, வழியும்நீர் பெருக நீர்வழிகளான கால்வாய், ஆறு, ஓடைகளை மண் மேடிடாமல் பராமரிக்க வேண்டும்.வெள்ளச் சமவெளிகள் அல்லது நீர்வழிப் பாதைகளை ஆக்கிரமித்து, குடியிருப்புகளையோ அல்லது தொழிலகங்களையோ கட்டுதல் கூடாது.நீர் சேமிக்கும் இடங்களில் குப்பை, கழிவு, நெகிழிப் பொருட்கள், தொழிற்சாலைக் கழிவுகள் போன்றவற்றைக் கொட்டக் கூடாது.பனை, வேம்பு, நாவல் முதலியன மரங்களை நீர்நிலைகளின் கரைகளில் நடுவதன் மூலம் கரை வலுவடைகிறது. மேலும் ஆற்றுமணல் அள்ளுவதைத் தடுக்க வேண்டும்.இயல்பாக ஓடும் நீர்வழிகளைத் திசை திருப்பக்கூடாது முதலியன மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகும்.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

*36. 1. முற்காலத்தில் கொடிய தண்டனைகள் இன்றி, ஆசிரியர்கள் மாணாக்கர்களை அன்பினால் வழிநடத்தியதைப் போல, அவர்கள் செய்யும் பிழைகளைச் சுட்டிக் காட்டி அதனால் ஏற்படும் தீய விளைவுகளையும் எடுத்துக் கூறுவேன்.*
*2. கல்வியை விரும்பிக் கற்கும் வண்ணம் அதன் அவசியத்தை உணர்த்தி எளிமையாகப் புரிந்து கொள்ளும் வகையில் கற்பிப்பேன். கற்பதற்கான எளிய வழிகளைக் கூறுவேன்.*
*3. பாடநூல் சார்ந்த மற்றும் சாராத , பல்வேறு பாடம் சார்ந்த தகவல்களையும், பொது அறிவுச் செய்திகளையும் திரட்டிக் கூறி, மாணவர்களை நெறிப்படுத்துவேன்.*
*4. இதன் மூலம் மாணவர்கள், தங்கள் தவறுகளைத் தாங்களே உணர்வர்.*

*37. திரைப்படத்தில் காட்சி சிறப்பாக அமைத்து விட்டால், வசனம் இரண்டாம் பட்சமாகி விடும்.திரைப்படத்தில் வசனம் இல்லாமல், காட்சியினை அடுத்தடுத்து வைத்துக் கதையை நகர்த்துவர்.திரைப்படத்தில் நடிப்பவரை முப்பரிமாணத்தில் காட்டும் காட்சிகள் இடம் பெறும்.உதாரணமாக ஒருவன் ஓடி வருவதாகக் காட்டி விட்டு, என்னாச்சு ? என்று கேட்டாலே போதும்.இது காட்சி மொழியாக மாறி விடும்.ஒருவன் உணர்ச்சியினை வெளிப்படுத்த முகத்தினைக் காட்சியாகக் காட்டினால் மட்டுமே போதும்.கட்டுப்படுத்த இயலாத அளவில் உள்ள ஒருவரின் கோபத்தினை நடிகர் வசனத்தின் வாயிலாக கத்த வேண்டியதில்லை.இதற்கு, கண்ணாடிக் குடுவையை இறுகப் பிடித்து உடைப்பதைக் காட்டினாலே போதும்.இப்படியாகக் கதை நகர்விற்கு திரைப்படக் காட்சியானது பெரிதும் உதவுகிறது.இதுவே திரைப்படக் காட்சியின் ஆற்றல் ஆகும்.*

*38. சரியான பருவத்தில் , சரியான விதைகளை விதைத்தால் விளைச்சல் நன்றாக இருக்கும். சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல், உரிய நேரத்தில் விதைத்தல், நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல், வயலினைக் கவனித்தல் முதலியனவைகளைச் சரியாகச் செய்தால் நாம் எதிர்பார்த்த அளவிற்கு நல்ல விளைச்சல் கிடைக்கும்.மேலும் அறுவடைக்கு பிறகு பாதுகாத்தல், உரிய விலை வரும் வரை இருப்பு வைத்தல் என ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வு, பொறுப்புணர்வு, நிர்வாக நெறி முதலியன சரியாக இருந்தால்தான் வேளாண்மை நன்றாகச் செழிக்கும்.நேர மேலாண்மையினை வேளாண்மையில் கடைப்பிடித்து சரியான விதைகளை சரியான பருவத்தில் விதைத்து, பயிரினைக் கவனித்து, உரிய உரங்களை அளித்தால் நல்ல விளைச்சலைப் பெற முடியும்.*

***பிரிவு – 3***

***எவையேனும் மூன்றனுக்கு மட்டும்*** *3 X 4 = 12*

*39. இக்குறட்பாவில் நிரல்நிரையணி பயின்று வந்துள்ளது.*

***நிரல்நிரை அணி - அணி விளக்கம்:*** *சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அந்த வரிசையின் படியே பொருள் கொள்ளும் அணி நிரல்நிறை அணி ஆகும்.அதாவது முதலில் ஒரு வரிசையில் சில சொற்களை வைத்து, அந்த சொற்களோடு தொடர்பு உடைய சொற்களை அடுத்த வரிசையில் முறைமாறாமல் சொல்வது நிரல்நிரை அணி என அழைக்கப்படுகிறது.*

***விளக்கம்*** *: அன்பு, அறம் ஆகியவற்றினை வரிசையாக நிறுத்தி அதனுடன் தொடர்பு பண்பு, பயன் ஆகியவற்றினை அடுத்த வரிசையில் இணைத்து பொருள் கொள்ளுமாறு அமைக்கப் பெற்றுள்ளதால் இதில் நிரல்நிரை அணி பயின்று வந்துள்ளது.*

***சொல் பொருள் பின்வருநிலையணி***
***அணி விளக்கம்:****செய்யுளில் முன்பு வந்த ஒரு சொல், மீண்டும் மீண்டும் பலமுறை வந்து அதே பொருளை விளக்கினால், அது சொல்பொருள் பின்வரு நிலையணி என அழைக்கப்படும்.*



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

***எடுத்துக்காட்டு:***
*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*

***பொருள்:*** *ஒரு செயலைச் செய்வதற்கு முன் செய்யக்கூடிய செயலின் வலிமை, தன்னுடைய வலிமை, பகைவனின் வலிமை மற்றும் துணையாளரின் வலிமை ஆகியவற்றினைச் சீர்தூக்கி ஆராய வேண்டும்.*

***விளக்கம்:*** *குறளில் வலி என்ற சொல் பலமுறை வந்து வலிமை என்ற ஒரே பொருளை விளக்குவதால் இக்குறளில் சொல் பொருள் பின்வரு நிலையணி பயின்று வந்துள்ளது.*

*40. 1. அணையின் 2. யாரால் 3. வேகமாகச் 4. தேவைகளின்*

*41.* ***எதுகை :*** *பிறப்பினால், சிறப்பு நன்மை தின்மை*
***மோனை :*** *பிறப்பு, பெருமை , சிறப்பு, செய்கை , தின்மை , தீண்ட*
***இயைபு:*** *வாராதப்பா , வேண்டுமப்பா , மேற்குலத்தார் , ஒன்னாதார்*
***அணி நயம்:*** *இயல்பு நவிற்சியணி*

*42. அ) யானைக்கும் அடி சறுக்கும் என்பதுபோல, வல்லரசு நாடுகளும் கூட, தற்போது பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.*
*ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை என்பதுபோல இயேசு பெருமான் பாவிகளின் தவறுகளை மன்னித்தார்.*
*43. கவிதை – மாணவர் விருப்பம் போல். கருத்து, சிறந்த சொல் பயன்பாடு, கற்பனை போன்றவற்றிற்கேற்ப மதிப்பெண் வழங்கப்படும்.*

## பகுதி – 4

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக** *3 X 6 = 18*

*44 அ) நாம் ஓர் உதவியும் செய்யாமல் இருக்க ஒருவர் நமக்கு செய்யும் உதவிக்கு ஈடாக இந்த மண்ணுலகையும், விண்ணுலகையும் கொடுத்தாலும் ஈடாகாது.உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி ஆனது சிறியதெனினும், அது இந்த உலகத்தினை விட பெரியதாக கருதப்படும்.பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவியின் அன்புடைமையினை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலினை விடப் பெரியதாக இருக்கும்.ஒருவர் தினை அளவு உதவியினைச் செய்தாலும், அதன் பயனை அறிந்தவர் அதனை பனையளவாகவே கொள்வர்.ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நன்றன்று.ஆனால் அவர் செய்த தீமையினை உடனே மறப்பது நன்று.எந்த அறத்தினை ஒருவர் அழித்தாலும் தப்ப வாய்ப்பு உள்ளது.ஆனால் ஒருவர் செய்த உதவியினை மறந்தவர்க்கு உய்வே இல்லை.*

*ஆ) கம்பர் திருத்தக்கத்தேவரைப் பின்பற்றி தன் இராமாவதாரத்தை விருத்தப்பாவினால் இயற்றினார். கம்பரைப் பின்பற்றி எச்.ஏ. கிருட்டிணனார் இரட்சணிய யாத்திரிகத்தினை விருத்தப்பாவினால் இயற்றியுள்ளார். கம்பர் வடமொழியில் இருந்த இராமனின் வரலாற்று காவியத்தினை தழுவி தமிழில் இராமாவதாரத்தை இயற்றினார். அதுபோலவே பில்கிரிம்ஸ் புரோகிரஸ் என்ற ஆங்கில நூலினைத் தழுவி எச்.ஏ. கிருட்டிணனார் இயேசுவின் வரலாற்றினை இரட்சணிய யாத்திரிகம் எனத் தமிழில் எழுதினார்.மேலும் எச்.ஏ. கிருட்டிணனாரின் பாடல் வரிகள் ,கம்பரின் வரிகள் போல கவித்திறன், கற்பனைத்திறன் உடையதாக விளங்கியதால் இவர் கிறித்துவக் கம்பர் என அழைக்கப்பட்டார்.*

***45 அ) கற்றல் முறைகள்:*** *மாணவர்களின் மொழித்திறனும், செயல்திறனும் கண்காணிக்கப்படும். மாணவர்கள் வினாக்கள் கேட்டும், விடைகள் கூறியும் கற்றுக் கொண்டனர். மாணவர்கள் அடிப்படை நூல்களை மனனம் செய்தனர். கணித*

வாய்ப்பாடுகளை தலைகீழ் மனப்பாடமும் செய்தனர். மாணவர்கள் அந்தாதி முறை மற்றும் எதுகை மோனையினைக் கொண்டும் தங்களின் செய்யுள்களை மனப்பாடம் செய்தனர்.

**கற்பித்தல் முறைகள்:** பண்டைக் காலத்தில் ஆசிரியருக்கும், மாணவர்களும் இடையே நடைபெறும் கருத்துப் பரிமாற்றமாக கற்பித்தல் இருந்தது. மாணவர்களை இலக்கியம், இலக்கணம், வாய்ப்பாடு என அனைத்தையும் மனனம் செய்ய வைத்து மாணவர்களைத் தெளிவு பெறச் செய்வார். வினாக்கள் கேட்பதன் வாயிலாக மாணவர்களை மதிப்பீடு செய்வர். மாணவர்களுக்கு ஆர்வமிருந்தால் வியாபாரம், கணிதம் பற்றியும் கற்பிப்பார்.

ஆ) **திரைப்படம் தயாரித்தல் :** கதை உருவாக்கம், நடிகர்கள் தேர்வு, உரையாடல் எழுதுதல், பாடல் எழுதுதல், பாடலுக்கு இசை அமைத்தல், இடங்களைத் தேர்வு செய்தல், படமாக்கல், ஒலி, ஒளிப்பதிவுகளைச் செய்தல், தணிக்கைக் குழுவிற்கு அனுப்புதல், படத்தினை வெளியிட, திரை அரங்குகளை தேடிப் பிடித்தல், பத்திரிக்கை முதலிய ஊடகங்களுக்குச் செய்தி தெரிவித்தல் முதலிய பல செயல்களுக்குப் பின்னர்தான் திரைப்படம் திரையரங்கில் திரையிடப்படுகிறது.

**ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழில் :** திரைப்படத்தினை உருவாக்கும் செயல்களுக்கு நூற்றுக்கணக்கான பேர் தேவைப்படுகின்றனர். அவர்களுக்கு உரிய நேரத்தில் உணவு, ஊதியம் தர வேண்டும். இவ்வாறு வேலை செய்யும் மக்களின் குடும்பம் திரைப்படத்தினை நம்பியே உள்ளது. இவ்வாறு ஆயிரம் பேரைக் காப்பாற்றும் தொழிலாக , திரைப்படத்துறை உள்ளது.

**கலை:** திரைப்படத்தில் வசனங்கள் மட்டுமின்றி ஆடல், பாடல் போன்ற கலைகளும் தேவைப்படுகின்றன. களரி, சிலம்பாட்டம் போன்ற தற்காப்புக் கலைகளும் சண்டைக் காட்சியில் இடம்பெறுகின்றன. சில இயற்கையான இடங்களுக்கு பதிலாக அவற்றினை வரைந்து அங்கு இருப்பது போல படம் எடுப்பர். இவ்வாறு ஓவியக்கலையும் வளர்க்கப்படுகிறது. இவ்வாறு திரைப்படத்துறை மறைமுகமாக பல கலைகளை வளர்க்கும் துறையாக உள்ளது.

46 அ) **பாரதியின் கடிதம்:** இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகத் திகழ்ந்த பாரதியார் அவர்கள் மொழிப்பற்று, சமுதாய மறுமலர்ச்சி, ஆன்மீகச் சிந்தனை உடையவராக இருந்தார்.

**மொழிப்பற்று :** பாரதியார் அவர்கள் 18 மொழிகளை அறிந்தவராக திகழ்ந்தாலும் தன் தாய்மொழியின் மீது பற்றுடையவராகத் திகழ்ந்தார். இதனை யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம் என்ற வரிகள் உணர்த்தும். பாரதியார் நெல்லையப்பருக்கு எழுதிய கடிதத்தில், தமிழ், தமிழ் தமிழ் என எப்போதும் தமிழை வளர்ப்பதையே கடமையாகக் கொள். தமிழில் புதிய சிந்தனைகள், புதிய உண்மைகள், புதிய இன்பங்கள் வளர வேண்டும். தமிழ் செழுமை அடைய வேண்டும் எனக் குறிப்பிட்டிருப்பது இவரின் மொழிப்பற்றைப் பறைசாற்றுகிறது.

**சமூகப்பற்று:** பெண்களுக்கு சம உரிமை வேண்டும்.ஆணும் பெண்ணும் ஒருயிர் இரு தலைகள், அவை ஒன்றுக்கொன்று தாழ்வில்லை. பெண்ணை அடிமை செய்வோன், தன் கண்ணைக் குத்திக் கொண்டவன். பெண்ணை அடைத்து வைப்பவன், கண்ணை அடைத்தவன் என எழுதுமாறு நெல்லையப்பரிடம் கூறியது இவரின் சமூகப் பற்றினைப் பறைசாற்றுகிறது.

ஆ) **அன்றைய கிராமங்கள் :** அன்றைய கிராமங்கள் இயற்கை வனப்பும் பச்சைப் பசேலென வயல் வெளிகளும் நிறைந்ததாக விளங்கின. எங்கு பார்த்தாலும் நெற்பயிர்களும், கரும்புத் தோட்டங்களும், மரங்களும், சிறு சிறு ஏரிகளும், குளங்களும், கோவில்களும், நீரோடைகளும் என இயற்கையின் தவப்பிள்ளைகளாக கிராமங்கள் விளங்கின. பெரும்பாலான குடிசை, ஓட்டு வீட்டுகள், ஒரு சில மாடி வீடுகள், ஆடு, மாடு, கோழி என வளர்ப்பு பிராணிகள் நிறைந்தனவாக கிராமங்கள் விளங்கின. திருமணங்கள்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

*உள்ளிட்ட நிகழ்ச்சிகள் பெரும்பாலும் வீடுகளிலேயே நடைபெறும். உறவினர்கள் நிகழ்ச்சிக்கு முன்பே வந்து தாங்களே சமைத்து அனைவரும் ஒன்று சேர்ந்து உணவு உண்டனர். குழந்தைகள் பாட்டி , தாத்தாக்களின் அரவணைப்பில் வாழ்ந்தனர். கோவில் திருவிழாக்களில் , கரகம், மயிலாட்டம் போன்ற கிராமிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.*

***இன்றைய கிராமங்கள் :*** *விவசாயத்தினையே முக்கிய தொழிலாக கொண்ட கிராமங்களில் தற்போது விளை நிலங்கள் விலை நிலங்களாக மாற்றப்படுகின்றன. நாகரிக வளர்ச்சியில் தற்போது இயற்கையினை இழந்து நகரத்தினை போல கிராமங்களும் மாடி வீடுகள், வண்டி வாகனங்கள் உடையனவாக மாறி வருகின்றன. திருமணங்கள் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மண்டபங்களில் நடத்தப்பட்டு, வேறு ஒருவரிடம் உணவு சமைத்தல், பரிமாறும் பொறுப்பினை தருகின்றனர். திருவிழாக்களில் கிராமிய நிகழ்ச்சிகள் நடைபெறாமல் திரைப்படம் தொடர்பான நிகழ்ச்சிகளே நடைபெறுகின்றன. குழந்தைகள் தற்போது பாட்டி, தாத்தாக்களின் அரவணைப்பு இல்லாமல், யாரிடமும் பேசாமல் அலைபேசிகளே கதியென கிடக்கின்றனர். இவ்வாறு கிராமங்கள் தங்களின் முகவரியினை இழந்து வருகின்றன.*

## ***பகுதி -5***

***அடி பிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக*** ***4 + 2 =6***

*47. அ) காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே,*
*மா நிறைவு இல்லதும், பல் நாட்கு ஆகும்;*
*நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே,*
*வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்;*

*ஆ) சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவா ம்*
*சொல்லிய வண்ணம் செ யல்.*

***ஆக்கம் :***

***அ. மயில்சாமி ,***
***முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் – தமிழ் ,***
***அரசு மேல்நிலைப்பள்ளி ,***
***கண்ணம்பாளையம் – 641 402 .***



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com